மும்பை
தமிழ் டைம்ஸ்
MUMBAI TAMIL TIMES

வியாழக்கிழமை 29 நவம்பர் 2001

# ஜுகு பீச்சில் பாட்டுப்பாடி பிச்சை எடுக்கும் கோல்கத்தா தலைமையாசிரியை

மும்பை, நவ. 29-

கோல்கத்தாவை சேர்ந்த பள்ளி தலைமையாசிரியை ஜுகு பீச்சில் பாட்டுப்பாடி பிச்சை எடுத்து வருகிறார்.

கோல்கத்தா அருகிலுள்ள சத்னா என்ற இடத்திலிருக்கும் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியின் தலைமை ஆசிரியையாக பணியாற்றி வந்தவர் மிருதுளா போஸ் (44).

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மிருதுளாவுக்கு, சமையலறையில் ஏற்பட்ட தீவிபத்தில் முகம் மற்றும் உடலின் மேல் பகுதியில் தீக்காயங்கள் ஏற்பட்டன. அவரது சிகிச்சைக்கு ஏராளமான பணம் செலவழித்தார் மிருதுளாவின் மூத்த சகோதரர்.

ஆனால் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மிருதுளா விடுபடாததால் மனமாற்றத்துக்காக அவரை மும்பை மற்றும் கோவாவுக்கு அனுப்பி வைத்தார் அவரது சகோதரர்.

கடந்த ஜுலை மாதம் மும்பை வந்த மிருதுளா, முதல் நாளன்றே ஜுகு பீச்சில் பணம் அனைத்தையும் ரவுடிகளிடம் பறிகொடுத்தார். உடுத்த மாற்று துணியின்றி கையில் பணம் இல்லாமல் பரிதவித்த அவர் பாட்டுப் பாடி பீச்சுக்கு வருபவர்களிடம் பிச்சை எடுக்க துவங்கினார்.

நாளடைவில் பீச்சில் பிச்சை எடுப்பதே அவரது தொழிலாகி விட்டது. இந்நிலையில் பீச்சில் உள்ள மற்ற பிச்சைக்காரர்களின் துன்புறுத்தல் பற்றி புகார் செய்ய கடந்த 19ம் தேதி சாந்தா குரூஸ் போலீஸ் நிலையத்துக்கு மிருதுளா சென்றபோது அவரது பரிதாப கதை தெரியவந்தது.

சரளமான ஆங்கிலத்தில் பேசியும், வங்காள மொழியில் இனிமையாக பாடிய மிருதுளாவை போலீசார் முதலில் சாந்தாகுரூசில் உள்ள 'கிரேசியஸ் ஹோம்'மில் சேர்த்தனர்.

பின்னர் நன்கொடை திரட்டி ரயிலுக்கு டிக்கெட் எடுத்துக் கொடுத்து மிருதுளாவை சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், ஏற்கனவே தனக்கு ஏராளமாக செலவு செய்த குடும்பத்தினருக்கு மேலும் பாரமாக இருக்க விரும்பவில்லை என்று கூறி மிருதுளா மீண்டும் மும்பை திரும்பி விட்டார்.